முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education. Northern Province

58 T I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) முன்னோடிப் பரீட்சை - 2021
**General Certificate of Education (Advance. Level) Pilot Exam - 2021**

நாடகமும் அரங்கியலும் II
**Drama & Theater II**

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

பகுதி 1 இல் 1தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் சரியானதும் பொருத்தமானதும் விடையை தெரிவு செய்க.

## பகுதி -1

(1) கிரேக்கத்தில் நாடகக்கட்டமைப்பில் கவனம் செலுத்திய நாடகஆசிரியர்?

(1) ஈஸ்கலஸ் (2) சோபோக்கிளிஸ் (3)யூரிப்பிடீஸ்

(4)அரிஸ்ரோபென்ஸ் (5) மென்னான்டர்

(2) தொன்மைக்கால இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் சடங்கரங்கு?

(1) தொவில் (2) றட்டயக்கும (3) ஹொகம்ப ஹங்காரிய

(4) சன்னியக்கும (5) கறாயகும

(3) சங்ககால அரங்கினைக் குறிக்கும் பதம்?

(1) பண்ணை (2) கூத்தாட்டு அவைக்களம் (3) களரி

(4) நாடகசாலை (5) ஆடுகளம்

(4) இலங்கை தமிழரங்கில் பாரம்பரிய, நவீன அரங்கில் அதிகளவு பணியாற்றியவர்?

(1) இ.சிவானந்தன் (2) பாலேந்திரா (3) குழந்தை ம.சண்முகலிங்கம்

(4) பேராசிரியர் சி.மௌனகுரு (5)கவிஞர் இ.முருகையன்

(5) "பட்டபாடெல்லாம் போச்சு…", "அருந்தவம் செய்தனடா..." ஆகிய பாடல்கள் இடம் பெற்ற நாடகங்கள்?

(1) ஏழுபிள்ளை நல்லதங்கள், அரிசந்திரா

(2) அரிசந்திரா, வள்ளி திருமணம்

(3) ஏழுபிள்ளை நல்லதங்கள் , பக்தநந்தனார்

(4) பக்தநந்தனார், அரிசந்திரா

(5) அரிசந்திரா, பூதத்தம்பி

(6) சற்றயர் நாடகம் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாதது?

(1) அங்கதச்சுவை
(2) டயோனிசியஸ் விழாவுடன் தொடர்புடையது.
(3) அவலச்சுவையுடன் இணைந்து ஆற்றுகை.
(4) லெனே விழாவுடன் தொடர்புடையது.
(5) அவலச்சுவை நாடகக் கதைப்பொருளை கேலி செய்தது.

(7) ''பாண்டவரும் கிளவுஸ் முனிவரும்'' எனும் நாடக ஆற்றுகையில் கூத்துப் பண்புகளை பயன்படுத்தியவர்?

(1) கலாநிதி சி.மௌனகுரு (2) இளைய.பத்மநாதன் (3) பாலேந்திரா
(4) க.சிதம்பரநாதன் (5) தாசீசியஸ்

(8) ''எந்தையும் தாயும்'' நாடகத்தின் மையப்பாத்திரம்?

(1) சங்கரப்பிள்ளை (2) ஐயாத்துரை (3) செல்வரத்தினம்
(4) கண்ணன் (5) வசந்தி

(9) ''இரத்தினாவளி'' நாடகம் தொடர்பான பொருத்தமற்ற கூற்று?

(1) கதைத்தலைவியின் பெயரைக் கொண்டுள்ளது
(2) நாடிக என்ற வகையினை சார்ந்தது
(3) சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது
(4) மாணிக்கமாலை எனும் நாடகத்திற்கு மூலமாக அமைந்தது
(5) பத்து வகை நாடகங்களில் ஒன்றாகும்

(10) பறைமேளக்கூத்தின் தலைமைக்கலைஞர்?

(1) அண்ணாவியார் (2) காமன் மாஸ்ரர் (3) சாம்பலாண்டிமார்
(4) மூப்பன் (5) காத்தான்

(11) கதைத்தொடர்பற்ற பாடல்களைக் கொண்டுள்ள அரங்குகள்?

(1) கோலம், வசந்தன் கூத்து (2.) சொக்கரி, மகிடிக்கூத்து
(3) நாடகம, கத்தோலிக்கக்கூத்து (4) நூர்த்தி, ஸ்பெசல் நாடகம்
(5) தொவில், கழிப்பு

(12) குளுவ நாடகம் காணப்படும் நாடக இலக்கியம்?

(1) பள்ளு (2) குறவஞ்சி (3) நொண்டி நாடகம்
(4) கீர்த்தனை நாடகம் (5) கூத்து இலக்கியம்

(13) பபூன் நகைச்சுவைப் பாத்திரம் காணப்படுவது?

(1) ஸ்பெஷல் நாடகம் (2) தெருக்கூத்து 3)நாட்டுக்கூத்து
(4) விலாசம் (5) நவீனநாடகம்

(14) மூன்றாவது அரங்கு என தனது அரங்கிற்குப் பெயரிட்டவர்?

(1) மேயர்கோல்ட் (2) பீற்றர்புறூக் (3) பாதல் சர்க்கார்

(4) சேக்ஸ்பியர் (5) பிறெக்ற்

(15) தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடுகளின் தொகை?

(1) இரண்டு (2) நான்கு (3) ஆறு (4) எட்டு (5) பத்து

(16) பலே தோன்றிய நாடு?

(1) சீனா (2) இத்தாலி (3) இந்தியா

(4) நோர்வே (5)ஜேர்மனி

(17) வலிமை அரங்கினைத் தோற்றுவித்தவர்?

(1) மேயர்கோல்ட் (2) பீற்றர்புறூக் (3) குறொட்டஸ்கீ

(4) றிச்சேட் செக்னர் (5) பிறெக்ற்

(18) மோடிமைப்பாணியின் பிரதான நோக்கமாக அமைவது?

(1) வாழ்வைப் பாவனை செய்தல்
(2) பார்வையாளரின் கற்பனைக்கு இடமளித்தல்
(3) பார்வையாளரைச் சிந்திக்கத்தூண்டுதல்
(4) வாழ்வுசார் நம்பகத்தன்மை ஏற்படுத்தல்
(5) சமகால பிரச்சனைகளை வெளிப்படுத்துதல்

(19) நடிகனது செயற்பாட்டை அரங்கில் புலப்படுத்த உதவுவது?

(1) காட்சியமைப்பு (2) வேடஉடை (3) ஒளி (4) ஒலி (5) இசை

(20) மகா நாடகம் என்ற நாடகவகை காணப்படுவது?

(1) சமஸ்கிருத அரங்கில் (2) நாட்டுக்கூத்தில் (3) சோழர்கால அரங்கில்

(4) கதகளி அரங்கில் (5) யட்சகானா அரங்கில்

(21) பாத்திரங்களின் புறத்தோற்றம் நடத்தை, உள்வாரியான மனோபாவங்கள் போன்றவற்றை விரிவாகவும், ஆக்கபூர்வமானதாகவும் முன்வைக்கும் கலை?

(1) சினிமா (2) நாடகம் (3) நாவல்

(4) இசை (5) நடனம்

(22) நாடகம் ஒன்றில் வெளிப்படையாகத் தெரியாதது?

(1) கதை (2) மோடி (3) பாத்திரப்பண்பு

(4) மோதுகை (5) கரு

(23) நாடக ஆற்றுகையின் போது அரங்கில் தமது கடமையை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்?

(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) காட்சியமைப்பாளர்
(4) மேடை முகாமையாளர் (5) நடன அமைப்பாளர்

(24) நா.சுந்தரலிங்கத்துடன் தொடர்பற்றது?

(1) நடிகர் (2) நாடகாசிரியர் (3) நெறியாளர்
(4) ஒப்பனையாளர் (5) நினைவூட்டுனர்

(25) சுழலும் அரங்கு காணப்படும் அரங்க வடிவம்?

(1) நோ (2) கபுக்கி (3) புண்றாக்கு
(4) கொவாகா (5) கியோஜின்

(26) நாடகம் ஒன்று ஆற்றுகை செய்யப்படும் போது தொடர்ச்சியாக நிகழ்வுகள் நிகழ்த்தப்படும் ஒழுங்கை தீர்மானிக்கும் நுட்பம்?

(1) கரு (2) பாடல் (3) கதைப்பின்னல்
(4) எழுத்துரு (5) சொற்திறன்

(27) கொமெடியா டெல் ஆர்த்தே தோன்றிய இடம்?

(1) கிறீஸ் (2) பிரான்ஸ் (3) இங்கிலாந்து
(4) இத்தாலி (5) யப்பான்

(28) பேராசிரியர் சி.மௌனகுருவினால் சமகால பிரச்சனைகளை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நவீன நாடகம்?

(1) இராம நாடகம் (2) சங்காரம் (3) இராவணேசன்
(4) மண்சுமந்தமேனியர் (5) வேள்வித்தீ

(29) கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகத்தில் காணப்படும் உரையாடல்?

(1) பேச்சுமொழி (2) கவிதைமொழி (3) பாடல்
(4) பாடல்,ஆடல்மொழி (5) செந்தமிழ்மொழி

(30) கழுமரம் பற்றிக் குறிப்பிடும் அரங்கு?

(1) காமன்கூத்து (2) அருச்சுனன் தபசு (3) மகிடிக்கூத்து
(4) காத்தவராயன் கூத்து (5) வசந்தன் கூத்து

(31) ரவர்ஹோல் நாடகமரபு என சுட்டப்படுவது?

(1) கோலம் (2) சொக்கரி (3) நூர்தி (4) நாடகம (5) சரத்சந்திரா நாடக மரபு

(32) நாடகம் ஒன்றை ஆற்றுகை செய்யும் போது நிதி திரட்டும் செயற்பாடுகளில் பங்கெடுப்பவர்?

(1) நாடகஆசிரியன் (2) நடிகன் (3) நெறியாளன்
(4) தயாரிப்பாளன் (5) அரங்க உரிமையாளர்

(33) நாடக பாடத்தை உயிரோட்டமான ஒரு கலையாக அரங்கவெளியில் படைக்கும் போது முதன்மை பெறுபவர்?

(1) நாடகஆசிரியன் (2) நினைவூட்டுனர் (3) நெறியாளன்
(4) தயாரிப்பாளன் (5) அரங்க உரிமையாளர்

(34) விசிறி நடிகனின் கைப்பொருளாகப் பயன்படுத்தும் வகையில் நாடகங்களைத் தயாரித்த நாடு?

(1) இலங்கை (2) இந்தியா (3)யப்பான்

(4) சீனா (5) இலண்டன்

(35) அழகு அல்லது காதல் எனும் கருத்தைக் குறித்து நிற்கும் நாடகவகை?

(1) இயற்பண்புவாதம் (2) யதாத்தவாதம் (3) மனோரதியவாதம்

(4) காவியபாணி (5) மிகைப்பாட்டுவாதம்

(36) சுதேசத் தமிழ்க்கலை மீட்டெடுப்பில் கலைக்கழகத்தினூடாக பணிகளை ஆற்றியவர்கள்?

(1) சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி
(2) சி.மௌனகுரு, கா.சிவத்தம்பி
(3) சு.வித்தியானந்தன், சி.மௌனகுரு
(4) கா.சிவத்தம்பி, காரை.சுந்தரம்பிள்ளை
(5) காரை.சுந்தரம்பிள்ளை, சி.மௌனகுரு


(37)



இவர் எந்நாட்டு நாடக ஆசிரியர்?

(1) ரஷ்யா (2) பிரான்ஸ் (3) இங்கிலாந்து
(4) ஜேர்மனி (5) நோர்வே

(38)



இந்த அரங்கில் ஆற்றப்பட்ட நாடக வகைகளின் எண்ணிக்கை ?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6

(39)



இவர் தோற்றுவித்த நாடக நிறுவனம்?

(1) சுகுணவிலாச சபை (2 நாடக அரங்கக்கல்லூரி (3) திருமறைக்கலாமன்றம்

(4) நடிகர் ஒன்றியம் (5) லங்காசுபோத விலாச சபை

(40)



இவரால் நெறியாள்கை செய்யப்படாத நாடகம்?

(1) புதியதொரு வீடு (2) பொறுத்தது போதும் (3) கூடிவிளையாடுபாப்பா

(4) சங்கிலி (5) கோடை

(40 x 1= 40 புள்ளிகள்)

# பகுதி 2

## பகுதி – A

உட்பகுதி A இலிருந்து இரு வினாக்களையும் உட்பகுதி B இலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக?

1.

1) ஒரு பாவையின் வீடு நாடகத்தின் பிரதான மோதுகை யாது?

(5 புள்ளிகள்)

2) ஒரு பாவையின் வீடு நாடகத்தில் பேசப்படும் விடயப் பொருளானது உலகப் பொதுமையானது எனக் கூறலாமா? உமது விடைக்கான காரணங்களைத்தருக.
(5 புள்ளிகள்)

3) ஒரு பாவையின் வீடு நாடகத்தில் கதையினை நகர்த்திச் செல்லும் குறியீட்டுப் பண்புகளை இனங்காண்க? (5 புள்ளிகள்)

2.

1) ஈடீப்பஸ் மன்னன் நாடகத்தில் விதி பெறும் முக்கியத்துவம் தொடர்பாக விளக்குக.

(5 புள்ளிகள்)

2) ஈடீப்பஸ் மன்னன் நாடகத்தினை கிங் லியர் நாடகத்துடன் ஒப்பிட்டு நாடகவாக்க முறைமை தொடர்பாக கண்டறிக. (10 புள்ளிகள்)

3.

1) இராவனேசன் நாடகத்தில் இராவணனின் பாத்திரப்பண்பு வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை விளக்குக. (5 புள்ளிகள்)

2) இராவனேசன் நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட கூத்துப்பண்புகளை இனங்கண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

3) இராவனேசன் நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட நவீன நாடகப்பண்புகளை கண்டறிந்து விளக்குக.

(5 புள்ளிகள்)

## பகுதி B

4. கூத்து என்றால் என்ன? கூத்தின் ஆற்றுகை முறைமையினை விளக்குக. (15 புள்ளிகள்)

5. இருபதாம் நூற்றாண்டின் பின் அரைக்காலப்பகுதியில் இலங்கைத் தமிழரங்கின் வளர்ச்சிப்போக்கினை விளக்குக. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக

    1) குருநான்ஸே
    2) பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திரா
    3) கபூக்கி
    4) தெருவெளியரங்கு
    5) ஆய்ச்சியர் குரவை

(3 x 5 = 15 புள்ளிகள்)